# பார்க்கவன் குரல்

மலர் - 16 இதழ் - 1

ஜனவரி - பிப்ரவரி 2026 விலை ரூ.10





## இந்திய ஜனநாயகக் கட்சியின்



## 4வது மாநில வெற்றி மாநாடு கடலூர் மாவட்டம், வேப்பூர் பாசாரில் சிறப்பாக நடைபெற்றது








# இந்திய ஜனநாயகக் கட்சியின் செயற்கை நுண்ணறிவு வீடியோ

இந்திய ஜனநாயகக் கட்சியின் மாநில மாநாட்டை முன்னிட்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட 4 நிமிடம் 28 வினாடிகள் ஓடும் வீடியோ மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எழுதிய பிரசார பாடல் வெளியிடப்பட்டது. “தமிழ் மண்ணே, தமிழ் தாயே மன்னிப்பாயா, தமிழ்நாட்டை ஆள்வதற்கோர் தமிழன் இல்லை என்று புலம்புவது கேட்கிறது” என்று தொடங்கும் அந்த பாடலில் இலவசங்கள் வழங்குவது குறித்தும், மதுக்கடைகள் குறித்தும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டை ஆள தமிழ்த்தாயின் பிள்ளைகள் சோம்பல் இன்றி உழைக்க வேண்டும். தமிழ் மண்ணும் தமிழ்த்தாயும் தமிழ்நாட்டை தமிழர்களையே ஆளவைக்க முடிவெடுப்போம் என்று அந்த பாடல் முடிகிறது.

இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் டாக்டர் பாரிவேந்தர் அவர்களும், கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து அவர்களும் வெள்ளுடை அணிந்து, பட்டொளி வீசி பறக்கும் கட்சிக் கொடியுடன் தொண்டர்களை வழிநடத்தி செல்வது போன்று அதில் காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளது.



# இந்திய ஜனநாயக கட்சியின்
## 4வது மாநில மாநாட்டிற்காக
## மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எழுதிய முதல் பாடல்

இந்தியத் திருநாட்டின் என்னருமை சொந்தங்காள்
இந்தியத் திருநாட்டின் என்னருமை சொந்தங்காள்

இணையில்லா போராட்டம் எங்கிலும் ஆர்ப்பாட்டம்
வெள்ளையனே வெளியேறு வீர முழக்கமிட்டோம்

விடுதலை வேண்டுமென்று
கொடுஞ்சிறையினில் அடைபட்டு
பல்லாண்டு கழித்தனரே
நம்தலைவர்கள் எல்லோரும்

நம் பாட்டன் தேசப்பிதா காந்தி
நேருக்குநேர் எதிர்நின்ற நேதாஜி

தாதாபாய் நௌரோஜி பெரும்
தலைமைக்கொரு நேருஜி

நம் தாமோதர் சாவர்க்கர்
உயிர் தமிழ்காத்த பாரதியார்

செக்கிழுத்த சிதம்பரனார்
மூதறிஞர் ராஜாஜி

அவர்கள் மட்டும் இல்லையடா

என்னருமை தம்பிகளே
இன்னும் சொல்வேன் தலைவர்களை
கேட்டிடுவீர் தங்கைகளே

பாளையங்கோட்டையில்
இன்னுயிர் தந்த கட்டபொம்மன்
கருப்பு காந்தி; படிக்கா மேதை காமராஜர்

நம் வீரப்பாட்டி வேலுநாச்சி
கூடவே இருந்த குயிலி
போராட்டத் தளபதி பெரியமருது
கூடவே போரிட்ட சின்ன மருது

இத்தனை பெயரை இழந்தன்றோ
இந்திய சுதந்திரம் நாம் பெற்றோம்



**சரணம் 1**

600 ஆண்டுகள்
எவர் எவரையோ ஆள வைத்தாய்
இந்தியன் என்ன கடைச்சரக்கா
கைமாற வைத்தாய்??

கூறுபோட்டு விற்பதற்கு

பாரதத்தாய் என்ன கறிக்கடையா??
அறிவார்ந்த இந்தியனே
ஆர்ப்பரித்து எழுந்திடுவாய்....

என் தாய்தமிழ் நாடே
உன் தாய் பாரதத்தை உயிர்காப்பாய்

நம் நாட்டை காப்பதற்கு இணையில்லா சட்டமுறை
நம் மாநிலங்கள் ஆள்வதற்கு வந்தது தேர்தல்முறை

வரும் தேர்தல் நம் தேர்தல்
எல்லோரும் விழித்தெழுவோம்

நம்கட்சி வெற்றி பெறவே.... நம் சக்தியை காட்டிடவே...
நமக்கான மாநாடு கடலூரில் கூடுதடா

கால்படையாய் வந்திடுவாய்
தம்பிகளே! தங்கைகளே!
ஊர்திகள் வைத்திருப்போர்
உன் தம்பிகளை அழைத்திடுவாய்

கட்சியின் வலிமைதனை
காட்டிடவே வந்திடுவாய் கடலூரில் உனைக்கான
காத்திருப்பேன் உன் தலைவன்
காத்திருப்பேன் உன் தலைவன்



# இந்திய ஜனநாயக் கட்சியின் 4வது மாநில மாநாடு வெற்றி மாநாடாக சிறப்பாக அமைந்ததற்கு மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் நன்றி வாழ்த்து



இந்திய ஜனநாயக் கட்சியின் 4வது மாநில மாநாடு வெற்றி மாநாடாக அமைந்தது. இந்த மாபெரும் மாநாடு வெற்றியடைய வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களுக்கும், மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. மாநாட்டின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதிகளாக இம்மாநாட்டில் கலந்து கொண்ட மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.குமரகுரு அவர்களுக்கும், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் அஇஅதிமுக கொறடா திரு தாமரை.ராஜேந்திரன் அவர்களுக்கும், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.அருள்மொழி தேவன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும் நன்றியும். இந்த மாநாடு சிறக்க இரவு பகலாக பாடுபட்ட இந்திய ஜனநாயகக் கட்சியின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள்.

– டாக்டர் பாரிவேந்தர்

# மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஜஜேகே நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களுடன் சந்திப்பு



தமிழகத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள, மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில் மூன்று பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை பாஜக தேசிய தலைமை நியமித்துள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கூட்டணி கட்சிகளுடனான கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.



அதன்படி 21.02.2026 அன்று இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் மற்றும் கட்சியின் தலைவர் இளையவேந்தர் டாக்டர் ரவிபச்சமுத்து அவர்களுடன் காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம்.ஹோட்டலில் சந்திப்பு நடைபெற்றது. திமுக அரசுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதோடு, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் பலத்தை நிரூபிக்கும் வகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

பொதுச்செயலாளர் மடல்

# நம்பிக்கை நட்சத்திரம்



***உழைப்பால் உயர்ந்த உத்தமத் தலைவர் மாண்பமை டாக்டர் டி.ஆர். பாரிவேந்தர் அவர்களின் அன்புத் தம்பிகளே! தங்கைகளே! வணக்கம்.***

மாநில செயற்குழு தீர்மானத்தின்படி 08-02-2026 அன்று கடலூர் மாவட்டம் வேப்பூரில் நடைபெற்ற 4வது இந்திய ஜனநாயகக் கட்சியின் மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக மாற்றி காட்டிய நமது மாண்பமை டாக்டர் வேந்தர் அவர்களுக்கு கோடான கோடி நன்றிகளை பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் வெற்றி மாநாடு வெற்றி பெற உழைத்திட்ட, பார்கவகுல முன்னேற்ற சங்க மாநில, மண்டல, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு அணிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களுக்கும் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் சார்பாகவும், இந்திய ஜனநாயகக் கட்சியின் மாநில தலைவர் உயர்திரு. டாக்டர் ரவி பச்சமுத்து அவர்கள் சார்பாகவும், பார்கவகுல முன்னேற்ற சங்க மாநில தலைவர் உயர்திரு.கோவையார் அவர்களின் சார்பாகவும், மனமகிழ்ந்த நன்றிகள்.

31-01-2026 அன்று காட்டாங்குளத்தூரில் SRM பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்ற ஒப்புதல் அளித்த அனைத்து செயற்குழு பொறுப்பாளர்களுக்கும், நன்றி! நன்றி!.

துரும்பை இரும்பாக்கும் வல்லமை பெற்ற வேந்தர் அவர்கள், நம் இன சமுதாயத்தின் அசைக்க முடியாத ஆலவிருட்சத்தின் ஆணிவேர் ஆவார்கள். அவர்களின் தீர்க்க தரிசனம் என்றும் நம் இன மக்களுக்கு தேவை. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் நம் பார்க்கவனின் உரிமைகள் மீட்டிட வேந்தர் கை காட்டும் வேட்பாளர்களை சட்டமன்ற உறுப்பினராக்குவது, ஒவ்வொரு பார்க்கவனின் உயிரினும் மேலான உன்னத கடமையாகும். வேந்தரின் கட்டளைகளை கட்டுப்பாடுடன் செயல்படுத்த வேண்டும். நாம் வேந்தரோடு செயல்படுவது நமக்கு கண்ணியமான புண்ணியமாகும். அன்பு சொந்தங்களே, கடவுளை பார்த்ததில்லை ஆனால்



நடமாடும் கடவுளாக நம் வேந்தர் இருக்கிறார். நம் தத்துவ வித்தகரின் கருத்துக்கள் உற்றுப் பார்த்தால் இனத்தின் எழுச்சிக்கான நோக்கமாகவே இருக்கும். ஆகவே, பார்க்கவனே சுயநல கும்பல் சிலர் எத்தனை கூக்குரலிட்டாலும் எந்தவிதத்திலும் நம் கட்டமைப்பை சீர் குளைக்க முற்பட்டாலும், அவதூறு பரப்பினாலும் அஞ்சா நெஞ் சராக நம் பார்க்கவனுக்காக பொன்னான நேரத்தை நம் உரிமைக்காக செலவிட நம் வேந்தரை தவிர வேறு யார் உள்ளார்.

ஆகவே, பார்க்கவனே! அமைதியாக சிந்தனை செய், எந்த கூட்டத்திற்கும் வலிமை சேர்ப்பது நம் சங்க கூட்டமே. எனவே தமிழகம் முழுவதும் உற்றுநோக்கினால் நம் பார்க்கவனின் வளர்ச்சிக்கும் ஒவ்வொரு பார்க்கவனுக்கும் இந்த உலகினில் நான் இருக்கிறேன் என மார்தட்டி வாழ்ந்துகாட்டிக் கொண்டிருப்பவர் நம் வீரர் வேந்தர் ஒருவரே. உதாரணம் இந்தி ஜனநாயக கட்சியின் மாநில மாநாடு எனவே சுயநலம் கொண்டு செயல்படும் சிலரை நாம் அடையாளம் கண்டு அஞ்சாமல் நம் இன ஒற்று மைக்காக ஒருங்கிணைந்து பாடுபடுவோம்.

நம்மை ஓர் இடத்தில ஒன்று கூட்டி ஒருங்கிணைத்து அழகு பார்க்கும் உத்தம வேந்தர் ஒருவரே. எனவே பதினைந்து வயதிற்கு மேற்பட்ட பார்க்கவனை விதிப்படி உறுப்பினராக்கு. இனி வேந்தரின் ஆணைப்படி மாவட்ட தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பார்கவன்குரல் ஆயுள் சந்தாதாரர்கள் ஒன்று கூடி மாநில பொறுப்பாளர்கள் முன்னிலையில் மாவட்ட கலந்தாய்வு கூட்டத்தை மாவட்டத் தலைவர்கள் நடத்திட வேண்டும். கூட்டத்தின் தீர்மானங்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக் கையை தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் மாவட்ட கூட்டத்தை நடத்தி தங்களது மாவட்டத்தின் நிகழ்வுகளை தலைமைக்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொள்கிறோம்.

என்றென்றும் நம் எதிர்கால இளைஞர்களின் வருங்காலம் சிறக்க டாக்டர் பாரிவேந்தர் ஒருவரே நம் நம்பிக்கை நட்சத்திரம்.

நன்றி!

என்றும் வேந்தர் வழியில்,

**Dr. கதிர் கணேசன் மூப்பனார்**
பொதுச் செயலாளர்
பார்க்கவக்குல முன்னேற்றச் சங்கம்



# இந்திய ஜனநாயகக் கட்சியின் நான்காவது மாநில மாநாடு



## அலைகடலென திரண்ட லட்சக்கணக்கான தொண்டர்கள்

இந்திய ஜனநாயகக் கட்சியின் நான்காவது மாநில மாநாடு கடலூர் மாவட்டம் வேப்பூரில் பிப்ரவரி 8 ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் பிரம்மாண்டமாக நடைபெற்றது. மாநாட்டின் நுழைவு வாயில் செங்கோட்டையின் அச்சு அசலான தோற்றத்திலும், மாநாட்டு மேடை தலைமைச் செயலகத்தின் வடிவிலும் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. கடலூர் சாலை நெடுகிலும் இருபுறமும் ஐஜேகே கட்சிக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன.

பரந்து விரிந்திருந்த மாநாட்டுத் திடல் முழுவதும் பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டு நெரிசல் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் பெட்டி பெட்டியாக தடுத்து இருக்கைகளை அமைத்திருந்ததோடு அகலமான நடைபாதைகளும்





ஒதுக்கப்பட்டு இருந்தன. மாநாட்டுக்கு வந்திருந்த அனைவருக்கும் அவரவர் இருக்கையிலேயே இளைப்பாற சிற்றுண்டிப் பைகளும், இந்திய ஜனநாயகக் கட்சியின் மஃப்ளரும் வைக்கப்பட்டிருந்தன. தொண்டர்கள் அனைவருக்கும் போதுமான வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிவறை மற்றும் மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மாநாட்டின் தொடக்கத்தில், பறையிசைக் கலைஞர்கள் முதல் கூத்துக்கலைஞர்கள் வரை ஏராளமானோர், பொய்க்கால் குதிரை, மானாட்டம், மயிலாட்டம் ஒயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளால் பார்வையாளர்களை உற்சாகமூட்டினர்.

லட்சக்கணக்கான தொண்டர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டு திடலில், நூறு அடி உயர கொடி கம்பத்தில், ஐ.ஜே. கே கொடியை ஏற்றி வைத்து மாநாட்டை துவக்கி வைத்தார் கட்சியின் தலைவர் இளையவேந்தர் டாக்டர் ரவி பச்சமுத்து அவர்கள். தொடக்கத்திலும் இடையிடையேயும் வேந்தர் ஐயா எழுதி உருவாக்கிய பாடல்கள், ஏஐ தொழில்நுட்பத்தில் காட்சிப்படுத்தப்பட்டு எல்ஈடி திரையில் மின்னியது.

*"ஓர் குடும்பம் என்றும் நாடாண்டால் தம்பி,*
*ஒரு நாளும் தமிழ்நாடு விடியாது தம்பி,*
*புதிய திட்டம் கொண்டுவர எவ்வாறு முடியும்,*
*தந்தை வழி தனயர்களும் நாடாள வந்தால்,*
*புதிய சிந்தனைகள் நாடாள எப்படித்தான் வருமோ?*

என்று டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எழுதிய பாடல் வரிகளுக்கு ஐ.ஜே.கே தொண்டர்கள் குழுக்களாக நடனமாடி ஆர்ப்பரித்தனர். இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர், ஐஜேகே வின் தலைவர் இளைய வேந்தர் ரவி பச்சமுத்து உள்ளிட்டோர் மாநாட்டு மேடைக்கு வந்தவுடன் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

## வாழ்த்துரை வழங்கிய தலைவர்கள்

இந்திய ஜனநாயகக் கட்சியின் பொருளாளர் மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜன், பார்க்கவ குல முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கலைமாமணி கோவைத்தம்பி, சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் டாக்டர் வி.வெங்கடேசன், திருமதி.மணிமங்கை சத்தியநாராயணன், ஐஜேகே பொதுச்செயலாளர் முனைவர் க.சண்முகம் கடலூர் அதிமுக மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான அருண்மொழித்தேவன், அதிமுக கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் இரா.குமரகுரு, அதிமுக முன்னாள் சட்டமன்ற கொறடா தாமரை எஸ்.ராஜேந்திரன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும் டாக்டர் பாரிவேந்தர் உரை:

## இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிய ஐஜேகே நிறுவனர் மாண்பமை டாக்டர் டி.ஆர். பாரிவேந்தர் அவர்களின் உரை:







இந்த வெற்றி மாநாட்டின் மூலம் நாம் வெற்றி விழாவை கொண்டாடி உள்ளோம். நான் 3 பாடல்கள் எழுதி உள்ளேன். கட்சி தொண்டர்களுக்கு சொல்லும் செய்தியைதான் நான் பாடலில் எழுதி இருக்கிறேன். நமது கட்சி தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆகிறது. அனைத்து தேர்தலிலும் நமது கட்சி போட்டி யிட்டு உள்ளது. 10 ஆண்டுகளில் மருத்துவம், கல்விக்காக 650 கோடி செலவிட்டு உள்ளேன். 36,000 பேருக்கு கல்வி உதவியும், 3 லட்சம் பேருக்கு மருத்துவ உதவியும் செய்து தந்துள்ளேன்.

அரசியலுக்கு, பதவிக்காக வரவில்லை. ஏழைகளுக்கு உதவவே வந்துள்ளேன். மக்கள் இலவசத்திற்கு ஆசைப்பட கூடாது. இந்த நிலை மாற வேண்டும். இந்திய ஜனநாயகக் கட்சி ஒழுக்கமான கட்சி. படித்தோரால் நடத்தப்படும் பண்புள்ள கட்சி.

அடிப்படையில் நான் கல்வியாளர். கல்விக்காக நிறைய



தொண்டுகள் செய்து வருகிறோம். மக்கள் நலன் கருதியே இந்திய ஜனநாயகக் கட்சியை தொடங்கினோம். இதுவரை 4 சட்டப்பேரவை மற்றும் 3 மக்களவைத் தேர்தல்களை எதிர் கொண்டுள்ளோம். கடந்த 15 ஆண்டுகளாக பாடுபட்டு கட்சியை வளர்த்து மக்களுக்கு சேவை செய்து வருகிறோம்.

பெரம்பலூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு அத்தொகுதியில் வெற்றி பெற்று என்னவெல்லாம் செய்தேன் என்பதை மக்கள் நன்கு அறிதவார்கள்.பெரம்பலூரில் ஐஜேகே கட்சி சார்பில் நடத்தப்பட்ட விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டில் திரண்ட கூட்டத்தை உளவுத் துறை மூலம் அறிந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அப்போது அதிமுக எம்எல்ஏவாக இருந்த இளவரசனை அழைத்து, அவரை விட்டு விடாதீர்கள், உடனடியாக தோட்டத்திற்கு அழைத்து வாருங்கள் எனக் கேட்டுக்கொண்டார். அதேபோன்று அவர் என்னை வலியுறுத்தி அழைத்த போதும் ஜெயலலிதாவை சந்திக்க மறுத்துவிட்டேன். எங்கள் கட்சி யின் நோக்கம் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்வது, கல்விக்கு உதவி செய்வது என்ற நோக்கில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த முறை பெரம்பலூர் மக்களவைத் தொகுதியில் வெற்றிபெற்று மக்களவைக்கு சென்றபோது ஏன் வந்தோம் என்றாகிவிட்டது. திமுக உறுப்பினர்கள் பதவியேற்கும்போது தமிழ்நாடு வாழ்க, அக்கட்சியின் தலைவர் வாழ்க என கூறி பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். எனக்கு அதில் உடன்பாடில்லை. நான் பதவியேற்றபோது இந்தியா வாழ்க தமிழ்நாடு வாழ்க எனக் கூறி பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டேன். ஏன் இங்கே இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இந்தியா வளர்ந்தால் தமிழ்நாடு தானாக வளரும். அந்த மனப்பான்மை எனக்கு. திமுக எம்.பி.க்கள் திட்டமிட்டே ஒருநாளும் மக்களவையை நடத்த விடமாட்டார்கள். வளர்ச்சியைத் தடுப்பதோடு மட்டுமின்றி வளர்ச்சியையும்



கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசோடு எப்போதும் எதிர்ப்பு என்ற நிலை மேற்கொண்டிருந்தால் தமிழ்நாடு எப்படி வளர்ச்சியடையும்? இதனால் இழப்பு தமிழ்நாட்டிற்கு தான்.

திராவிடக் கட்சிகள் வந்த பின்னர் தான் ஊழல், லஞ்சம், கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, மாணவர்களுக்கு மரியாதையும் பாதுகாப்பும் இல்லாத நிலை தான் உருவாகியிருக்கிறது. மக்கள் இதை கவனிக்க வேண்டும். இப்படியே இது தொடருமானால் இளைஞர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு கிடைக்கும்? வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் என சிந்திக்க வேண்டும். என்று கூறினார்.

### ஐஜேகே தலைவர் இளையவேந்தர் டாக்டர் ரவி பச்சமுத்து அவர்களின் முன்னிலை உரை:

இந்த மாநாட்டிற்கு பெருமளவில் பெண்கள் வந்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல விஷயம். ஒரு பெண் முன்னேறினால் அந்த குடும்பமே முன்னேறும். பெண்கள் அரசியலில் ஆர்வமுடன் கலந்துகொள்வது வரவேற்கத்தக்கது. ஆண்கள் அவர்களை சிரமத்திற்கு உள்ளாக்காமல் இருந்தாலே



போதும். தமிழ் மொழி வளமான மொழி தமிழர்கள் வெற்றியாளர்கள் என்று தமிழைப் பற்றியும் தமிழர்களின் சிறப்பை பற்றியும் பிரதமர் மோடி செல்லுமிடமெல்லாம் தனது உரையில் புகழ்ந்து பேசி வருகிறார். உலகம் முழுவதும் எக்கனாமிக்கல் வார், பயோ வார் என்று உலகப் போருக்கான பதட்டமான சூழல் நிலவிவரும் வேளையில் நாம் பிரதமர் மோடியின் கரங்களை இறுகப்பற்றி அவருக்கு வலு சேர்க்க வேண்டும். பிரதமர் மோடியை போலவே தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள மற்ற கட்சித் தலைவர்களும் மக்களுக்கும் நாட்டுக்கும் சிறப்பான பங்காற்றி இருப்பதாக தெரிவித்த அவர், 108 ஆம்புலன்ஸ் திட்டத்தை கொண்டு வந்ததே பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தான் என்றும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஒரு வெற்றி கூட்டணி என்று அவர் உறுதிப்பட தெரிவித்தார்.

அய்யா எழுதிய பாடல்களை எல்லாம் கேட்டபோது உணர்ச்சி மேலீட்டினால் நானே நெகிழ்ந்து போய் விட்டேன். இளைஞர்கள் எப்படி வாழ வேண்டும் யாரைப் பின்பற்றி வாழ வேண்டும், கலைஞரைப் பின்பற்றிப் போவது தவறில்லை அதாவது நடிகர்களை பின்பற்றுவதில் தவறில்லை. ஆனால் அவர் எம்ஜிஆர் போல மக்கள் நலன் நிலைக்கும் நடிகராகவும் இருக்க வேண்டும் என்று தனது உரையை நிறைவு செய்தார்.

### இந்திய ஜனநாயகக் கட்சியின் பொருளாளர் மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜன் அவர்கள் உரை:

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இந்திய ஜனநாயகக் கட்சியின் எதிர்காலம் மற்றும் தொண்டர்களின் நலன் அவர்களுடைய முன்னேற்றம் இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுபார்க்கும் போது ஒரு தனிப்பட்ட அரசியல் களத்தை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ்நாடு இருக்கிறது. அப்படிப்பட்ட சூழலில் நம்



ஐஜேகே முன்னேற்ற பாதையில் செல்ல வேண்டிய முனைப்பில் ஒட்டுமொத்த ஒன்றிய அரசியலோடு சேர்ந்தால்தான் நமக்கு எல்லா ஒரு கிடைக்கும் என்ற பயன்களும் விதமான காரணத்தினால் இன்றைய அகில இந்திய அரசியலோடு ஒத்துப் போகின்ற ஒரு அரசியலை எடுத்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற பழைய ஆட்சி முறைகளை விலக்கி விட்டு ஜனநாயக பாதையில் செல்வதற்கு புதிய புதிய சக்திகளும் உத்வேகமும் தேவைப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்குண்டான முன்னேற்றத்தில் ஐஜேகே தனது பாதையில் உறுதியாகவும் வலுவாகவும் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதை உறுதியாக சொல்ல முடியும். சென்று என்னால் இருக்கின்ற சவால்களை ஆனால் நமக்கு எதிர்நோக்குகின்ற போது இன்னும் நாம் உழைப்பதற்கும் கடினமாக முடிவுகளை எடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். சமுதாய மக்களுக்கு உண்டான பங்களிப்பையும் விகிதாச்சாரத்தையும் கொடுப்பதற்கு யார் தயாராக இருக்கிறார்களோ அவர்களோடு பயணிப்பது என்பதுதான் நம்முடைய தமிழ் சமுதாயத்திற்கு நாம் செய்கின்ற பெரிய உதவியாகவும் இருக்க முடியும். இதனுடைய அடிப்படையில் மத்தியில் வலுவான ஆட்சி மாநிலத்தில் வலுவான ஆட்சியையும் ஒரே கூர்மையில் இருக்கின்ற பொழுது நமக்கான தேவைகளை நாம் கேட்டு பெறுவதற்கு பேரம் பேசும் Bargaining Capacity என்று சொல்லப்படுகின்ற நமக்கு



நன்மைகள் எளிதாக கிடைக்கும். எனவே தான் இந்த பாதையை நாம் தேர்ந்தெடுத்து இருக்கின்றோம்.

வாக்களிக்கின்ற முறைகளில் வந்திருக்கின்ற மாற்றம் பொருத்தவரையில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை விட யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்பதில் தீர்மானமாக இருக்க வேண்டும் என வேந்தர் கூறுகிறார். ஆகவே மாற்றம் தான் ஒரு நிரந்தரமான முன்னேற்றத்தை உருவாக்கும் என்ற காரணத்தினால் தான் இந்த முடிவை ஐஜேகே தலைமை எடுக்கின்றது. ஆகவே வாக்களிப்பவர்கள் சிந்தாமலும் சிதறாமலும் தங்கள் வாக்குகளை நாட்டினுடைய முன்னேற்றம் சமுதாய முன்னேற்றம் மற்றும் மக்களுடைய எழுச்சிக்கான சமயசார்பற்ற சூழலில் மத கலவரம் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்றால் அந்த பாதை தான் தெளிவான பாதை என்பதால் நம் வாக்குகளை ஐஜேகே வுக்கு செலுத்த வேண்டும். எப்போதும் தெள்ளத்



தெளிவாகவும் சீராகவும் இருக்கின்ற மனநிலையில் முன்னேற்றம் என்பது பார்க்கின்ற ஒரு Positive Attitude நேர்மறை சிந்தனைகளை கொண்ட ஒருவர்தான் நம் தலைவர் பாரிவேந்தர். அவர் எடுக்கும் முடிவுகள் சிறப்பானதாகவும் இருக்கும். என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

வேந்தர் என்ற அடைமொழிக்கு ஏற்ப பொருளாகவும், கருவியாகவும், கல்வியாகவும், காரணியாகவும், அவர் இருப்பதற்கு காரணம், இலவச கல்வி எளியோருக்கும் கிடைக்க வேண்டிய கல்வியையும் மருத்துவசேவையும் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேல் வேந்தரும், ரவியும் தொடர்ந்து மக்கள் சேவை செய்கிறார்கள். அவர்களது பாதையில் நாம் செல்வதுதான் நமக்கு பாதுகாப்பு. ஆகவே உண்மையாக பாடுபடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்கள் மனம் புண்படும் வார்த்தைகளை கூறாமல் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை சபை அடக்கத்தோடு பேசினால் பிறர் மனம் கவர முடியும் என்பது எனது கருத்து. நாம் சந்திக்கப் போகின்ற தேர்தல் இன்னும் 50 நாட்கள் தான் இருக்கிறது உங்கள் கடமைகள் இன்றே தொடங்குங்கள் வாழ்க ஐஜேகே.

**திருமதி.மணிமங்கை சத்தியநாராயணன் அவர்கள் உரை:**

இத்தனை ஆண்டுகள் ஐயா அவர்கள் கட்சியை சிறப்பாக வழிநடத்தி வந்திருக்கிறார்கள். இந்த வருடம் 2026 ஆம் ஆண்டு தேர்தலில் எத்தனை தொகுதிகள்



கொடுத்தாலும் அத்தனை தொகுதிகளிலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் ஐஜேகே சார்பாக யார் போட்டியிட்டாலும் அவர்களை வெற்றி பெறச் செய்து ஐயா அவர்களுக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

**தமிழக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்களின் சிறப்புரை :**



எஸ். ஆர்.எம் நிறுவனத்தில் மட்டும் 5,000 மாணவர்களுக்கும் மேல் இலவசமாக படிப்பதற்கு உதவி செய்கிறார். மருத்துவமனைக்கு வருபவர்களுக்கு இலவச சிகிச்சை அளித்து உதவுகிறார். பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் நல்லெண்ணத்தை பெற்றவர். அதிமுகவின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமைந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளும், இந்த மாநாட்டில் அலை கடலென திரண்டிருக்கும் தொண்டர்களின் கூட்டமும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உறுதிப்படுத்துகிறது. தமிழ்நாட்டில் இன்று ஆளும் கட்சியின் மீது மக்களுக்கு மாபெரும் வெறுப்பு உண்டாகி இருக்கிறது. அதன் எதிரொலியை நமது கூட்டணிக் கட்சிகள் நடத்தும் அத்தனை கூட்டங்களிலும்



மாநாடுகளிலும் மக்கள் கூட்டத்தை காண முடிகிறது என்று நயினார் நாகேந்திரன் பேசினார்.

ஐஜேகே நடத்திய மாநாடு அவ்வளவு சிறப்பாக திட்டமிட்டு நடத்தப்பட்டது. மாநாட்டுக்கு அலை கடலென தொண்டர்கள் கூட்டம் திரண்டு வந்திருந்த போதும், அனைவரும் ஒரு ஒழுங்கை கடைபிடித்து கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டதைக் காண முடிந்தது. பல ஆண்டுகளாக கல்வியிலும் மருத்துவத்திலும் சேவையாற்றி வரும் பாரிவேந்தர் ஐயாவின் கட்சித் தொண்டர்கள் எந்த அளவுக்கு கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடனான ஒழுக்கத்தை கடைபிடிப்பவர்கள் என்பதற்கு இந்த மாநாடே சான்று என்றால் அது மிகையில்லை. அப்படி தலைமையின் வார்த்தைக்கு கட்டுப்படக்கூடிய தொண்டர்களைக் கொண்ட ஒழுக்கமான ஒரு கட்சியாக ஐஜேகே திகழ்கிறது என்பதற்கு இந்த மாநாட்டு காட்சிகளே சாட்சி என்று கூறினார்.

## பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கலைமாமணி கோவைத்தம்பி அவர்கள் உரை:



வரலாற்று சிறப்புமிக்க ஐஜேகே மாநாட்டின் தலைவர் டாக்டர் பாரிவேந்தர் அவர்களே ஐஜேகே கட்சியின் தலைவர் அருமை உடன்பிறப்பு இளைய வேந்தர் அவர்களே பொருளாளர் அருமை அண்ணன் மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜன் அவர்களே மேடையில் வீற்றிருக்கின்ற பல்வேறு நிர்வாகிகளே கீழே அமர்ந்திருக்கின்ற ஐஜேகே கட்சியின் தொண்டர்களே உங்கள் யாவருக்கும் என் பணிவான வணக்கங்கள். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு நான் கோவையில் இது மாதிரி ஒரு பிரம்மாண்டமான மாநாட்டை கண்டேன் அந்தக் மாநாட்டில் வணக்கத்திற்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் உரையாற்றினார்.







அந்த உரையில் அவர் குறிப்பிடும் பொழுது கூட்டத்தைப் பற்றி சொன்னார்கள் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக தியாகங்கள் செய்த சொந்தக்காரர்கள் யார் யாராவது இங்கே வருகை தந்திருப்பார்கள் எனில் அவர்களில் பாதங்களில் படுகின்ற தூசியை நான் வணங்குகிறேன் என்று அமரர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஐயா அவர்கள் சொன்னார்கள். அதே வார்த்தையை இங்கு இந்த நேரத்தில் சொல்லுகின்றேன் டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் மீது உண்மையாக நேசிக்க கூடிய சக்தி படைத்த ஐஜேகே தொண்டர்கள் அனைவருக்கும் இங்கே வருகை தந்து இருக்கின்ற அத்தனை அத்துணை தொண்டர்களுக்கும் அவர்களின் பாதங்களில் படுகின்ற தூசிக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நாம் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வருகின்ற தேர்தலை சந்திக்க இருக்கின்றோம் அந்த தேர்தலில் ஐஜேகே கட்சி ஒரு மகத்தான ஒரு முற்போக்கு அணியில் சேர்ந்து இருக்கிறது. இந்த தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும் என்று சொன்னால் எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டும் கடுமையாக உழைக்க வேண்டும் என்று சொன்னால் டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் அதை நீங்கள் உருவாக்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் விடை பெற்றுக் கொள்கிறேன் நன்றி வணக்கம்.

## ஆலோசகர் வழக்கறிஞர் டாக்டர் வி.வெங்கடேசன் அவர்கள் உரை:

இந்திய ஜனநாயகக் கட்சியின் நான்காவது மாநில மாநாட்டிற்காக அலைகடலென திரண்டு வந்திருக்கும் ஐஜேகே தொண்டர்களை பார்க்க முடிகின்றது. இப்படிப்பட்ட இந்த இனிய விழாவினை காண்பதற்கும் தலைமை தாங்கி நடத்திக்கொண்டு இருக்கின்ற உத்தமத் தலைவர் டாக்டர் பாரிவேந்தர் அவர்களே! இளையவேந்தர் அவர்களே

இன்றைக்கு நாம் எல்லோரும் ஒரு சபதம் எடுக்கின்ற வகையில் நமக்கு வேந்தர் அவர்கள் முத்தான ஆறு கொள்கைகளை கொடுத்துள்ளார்கள். அந்த கொள்கையை நாம் உயிரினும் மேலாக கருதி இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் டாக்டர் பாரிவேந்தர் அவர்களும் இளைய வேந்தர் அவர்களும் யாரை கைகாட்டுகிறார்களோ அவர்களை வெற்றி பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்வதோடு இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் திராவிட முன்னேற்ற கழகத்தை அப்புறப்படுத்தி தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர்களும் இந்திய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களும் அனைவரும் நமது வேட்பாளர் தான் போட்டியிடுகின்றார் ஒரு உன்னத தன்மையோடு இருந்து வேந்தர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தி மேலும் மேலும் பல வெற்றிகளை அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் இந்த வேளையிலே நமது பாரதி அவர்கள் சொன்னது போல் தேடிச் சோறுநிதந் தின்று பல சின்னஞ் சிறுகதைகள்

பேசி மனம் வாடித் துன்பமிக உழன்று பிறர்

வாடப் பலசெயல்கள் செய்து நரை கூடிக் கிழப்பருவ மெய்தி கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும் பல வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வே னென்றுநினைத் தாயோ?

என்று சொன்னானே பாரதி அந்த வாக்குக்கு உயிர் சேர்க்கும் வகையில் வேந்தர் அவர்களும் இளைய வேந்தர் அவர்களும் என்ன முடிவெடுக்கிறார்களோ அத்தனை முடிவுக்கும் இருக்கும் இந்திய ஜனநாயகக் கட்சியின் தொண்டர்கள் இருந்து பாடுபடுவோம் என்று, “வேந்தரால் நாம் வேந்தருக்காகவே நாம்” என்று சொல்லி விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

## இந்திய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் முனைவர் க.சண்முகம் அவர்கள் உரை:



அனைவருக்கும் இனிய மாலை வணக்கம் தேசியத்தையும் தமிழையும் தன்னுடைய இரு கண்களாக கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற உத்தமத் தலைவர் அவர்களை வணங்கி நம்மால் முடியாதது யாராலும் முடியாது நம்மால் மட்டுமே முடியும் என்று அனுதினமும் நம்மை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்கள் எழுச்சி நாயகர் இளைய வேந்தர் ஐயா அவர்களையும் வணங்கி தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மறுபடியும் தர்மமே வெல்லும் நம்முடைய தர்மத்தின் தலைவன் 2026 இல் இந்திய ஜனநாயகக் கட்சி சட்டமன்றத்தில் நுழைவது கட்டாயம் அது நிச்சயம் நல்லவர்கள் லட்சியம் வெல்வது நிச்சயம் அதற்கு சான்றாக இங்கே நம்முடைய படைகள் இந்திய ஜனநாயகக் கட்சியின் சொந்தங்கள் இங்கே திரண்டு இருக்கிறீர்கள்.


# பார்க்கவன் குரல்

உடையார் - மூப்பனார் - நயினார்

மலர் - 16 இதழ் - 1 ஜனவரி - பிப்ரவரி 2026





நிறுவனர்:

**டாக்டர் பாரிவேந்தர்**

ஆசிரியர்:

**எஸ்.ஜெயராமன்**

இணை ஆசிரியர்:

**ம. சுந்தரராசு**



சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. | 1000/- |
| ஓர் ஆண்டு சந்தா | ரூ. | 120/- |
| தனிப்பிரதி | ரூ. | 10/- |
| விளம்பரக் கட்டணங்கள் | | |
| பின் அட்டை | ரூ. | 15,000/- |
| முன்/பின் உள் அட்டை | ரூ. | 10,000/- |
| உள் முழுப்பக்கம் | ரூ. | 5000/- |
| உள் அரைப்பக்கம் | ரூ. | 2500/- |
| திருமண விளம்பரக் கட்டணம் | | |
| முழுப்பக்கம் | ரூ. | 2000/- |
| அரைப்பக்கம் | ரூ. | 1000/- |
| வரிவிளம்பரம் | ரூ. | 400/- |



சந்தா மற்றும் விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி:
பார்க்கவக் குல முன்னேற்றச் சங்கத் தலைமையகம்
9, 34வது தெரு, 3வது அவென்யூ, அசோக் நகர், சென்னை &83.
☎:8754427276, E-mail: parkavan100@gmail.com



Edited, Printed and Published by S.JAYARAMAN on behalf of Parkavakula Munnetra Sangam, Chennai -83. Printed at Chennai Offset Printers Elliess Road, Chennai &600002


பார்க்கவன் குரலில் வெளியிட தகுதியுள்ள படைப்புகள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

# இந்திய ஜனநாயகக் கட்சியின்
## 4வது மாநில மாநாடுத் தீர்மானங்கள்

### தீர்மானம் - 1

மக்கள் விரோத திமுக அரசு பொய்யான வாக்குறுதிகளால் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டு, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், மின் கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைக் கலாச்சாரம், நிர்வாகச் சீர்கேடு ஆகியவற்றுடன் ஊழல் மலிந்த ஆட்சியை நடத்துகின்ற திமுக அரசை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

*(வாசித்தவர் திரு.ஆர்.மணிவேல் – மாநில துணை அமைப்புச்செயலாளர்)*
*கெங்கவள்ளி சட்டமன்ற தொகுதி தலைவர்*

### தீர்மானம் - 2

நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில், ஆளும் மக்கள் விரோத திமுக அரசை அகற்றிவிட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டலின்படி, மாண்புமிகு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையின்கீழ் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி அமைய வேண்டுமென்பதை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு.பி.என்.ஆர்.பாரிகணபதி – மாநில இளைஞரணி துணைச் செயலாளர்)*
*திருப்பூர் (வ) சட்டமன்ற தொகுதி தலைவர்*

### தீர்மானம் - 3

இந்தியாவில் பிறந்த அனைவரும் சமம். எனவே சிறுபான்மையினர் அதாவது மைனாரிட்டி என்ற சொற்றொடரை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்பதையும், சாதி, சமய, மத அடிப்படையில் வேற்றுமைகள் வளர்வதைத் தடுக்க, இனிவரும் காலங்களில் மைனாரிட்டி என்ற சொல்லை. சட்டபூர்வமாக நீக்க தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு.கே.முகம்மது இத்ரீஸ் – மாநில சிறுபான்மையினரணி செயலாளர்)*

### தீர்மானம் - 4

கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் அளிக்கப்படும் முன்னுரிமை எனப்படும் இடஒதுக்கீடு, இனி ஜாதி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் அளிக்காமல், பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்பட வேண்டும் என்பதை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு.எல்.பிரபுராஜா – மாநில துணை அமைப்புச் செயலாளர்)*
*உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி தலைவர்*

### தீர்மானம் - 5

விருத்தாசல மக்களின் நீண்டகால கோரிக்கையான தனி மாவட்டம் என்கிற கோரிக்கையை ஏற்று, விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு.எம்.செந்தில்குமார் – மாநில துணை பொதுச்செயலாளர், பாமுச மாநில பொருளாளர் )*

## தீர்மானம் - 6

நேரம், பணம், மனித ஆற்றல் ஆகியவை அதிகம் வீணாவதைத் தடுக்க, ஒரே நாடு, ஒரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு.பி.கே.செல்வக்குமார் – – லால்குடி சட்டமன்றத்தொகுதி தலைவர் )*

## தீர்மானம் - 7

தமிழக மீனவர்களின் நீண்டநாள் கோரிக்கையபின, 1974 ஆம் ஆண்டு

திமுக அரசால் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையிலான மத்திய அரசு உடனே மீட்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட வேண்டும் என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திரு. பழனிவேல் – கொளத்தூர் சட்டமன்றத்தொகுதி தலைவர்)*

## தீர்மானம் - 8

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்று அழைக்கப்படும் நிசிஸி சட்டத்தில் உரிய சட்டத்திருத்தங்களை மேற்கொண்டு, ஒழுங்குப்படுத்தப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*(வாசித்தவர் திருமதி.கலையரசி செந்தில்குமார் – மாநில மகளிரணி துணைச்செயலாளர் )*

## தீர்மானம் - 9

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பி.எம்.ஶ்ரீ பள்ளிகள் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைக்க வேண்டும் என மத்திய மாநில அரசுகளை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*( வாசித்தவர் திரு. சந்தோஷ் – நாமக்கல் சட்டமன்றத்தொகுதி தலைவர் )*

## தீர்மானம் - 10

தமிழகத்தில் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் போக்குவரத்து ஊழியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை மாநில அரசு கவனத்தில் கொண்டு, அவைகளை விரைந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

*( வாசித்தவர் திரு. கலைமணி ஆசிரியர் – அறந்தாங்கி சட்டமன்றத்தொகுதி தலைவர் )*

## தீர்மானம் - 11

தமிழகத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் நெல் கொள்முதல் செய்யவும், இருப்பு வைப்பதற்கும் ஏதுவாக மூடப்பட்ட கிடங்குகளை உடனடியாகத் திறக்க வேண்டும். மேலும், நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் அமைப்பதோடு, உரிய எடையில் நெல் கொள்முதல் செய்யயப்படுகின்றதா என்பதை நவீன இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை நிர்ணயம் செய்து, கொள்முதலையும் சந்தைப்படுத்தலையும் அரசு தீவிரமாகக் கண்காணித்து விவசாயிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று தமிழக அரசினை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

*( வாசித்தவர் திரு.தா.ரா.பார்த்திபன் – ஆத்தூர் சட்டமன்றத்தொகுதி தலைவர் )*

# இந்திய ஜனநாயக கட்சியின்
## 4வது மாநில மாநாட்டிற்காக
### மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எழுதிய
### இரண்டாம் பாடல்

# அழைக்கின்றார் வேந்தர்

**பல்லவி**

அழைக்கின்றார்.. அழைக்கின்றார் அழைக்கின்றார் வேந்தர்..!
ஆர்வமுள்ள இளைஞர்களை அழைக்கின்றார் வேந்தர்..!!

அரசியலில் ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை,
அடிமை விலங்கை உடைத்தெரிய
அழைக்கின்றார் வேந்தர்..!

வருமை ஒருநாளும் வாராது தானாய்..
வருங்காலம் நமதென்று கடினமாய் நீ உழைத்தால்..!

படித்தவர்கள் அரசியலை ஒதுக்கி நீ வைத்தால்
பாமரர்கள் உன் இடத்தை நிரப்பிடுவார் தம்பி..!

அறிவார்ந்தோர் அரசியலை வெளிநின்று பார்த்தால்
அன்றாடம் பிழைப்பிற்கே தள்ளாட்டம் வருமே..

படித்தோர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டி
படித்தவன் நான் உங்களுக்கு மேடை போட்டு தந்தேன்..!

ஓர் குடும்பம் என்றும் நாடாண்டால் தம்பி
ஒருநாளும் தமிழ்நாடு விடியாது தம்பி..

புதிய திட்டம் கொண்டுவர எவ்வாறு முடியும்
தந்தைவழி தனையர்களும் நாடாள வந்தால்,
புதிய சிந்தனைகள் நாடாள எப்படித்தான் வருமோ..?



**சரணம்**

ஜனநாயக முறையில் நாடாண்டால் தம்பி
சாமானியன் கூட நாடாள வாய்ப்புண்டு தம்பி..

இல்லாத திராவிடத்தை இருப்பதுபோல பேசி
எழுபத்தைந்தாண்டுகள் ஆண்டிட்டார் தம்பி..!

மாற்றம் ஒன்றே மாறாது என்பார் – ஆனால்
மக்கள்தான் ஏனோ மறந்திட்டார் தம்பி.. !

வருகின்ற தேர்தலில் வாளாய் நீ இருந்தால்,
வருந்துகிறோம்.. தமிழ்நாட்டை யார் காப்பார் தம்பி

வறுமை – வேலையின்மை – ஊழல் – லஞ்சம்
ஓங்கி நிற்கும் தம்பி – உன்
எதிர்காலம் போச்சுதடா அறிவாயா தம்பி..?

நாடகக் கம்பெனியை நாடாள வைத்தாய்,
நாளும் கொண்டாட்டம்; மாலையெல்லம் மனமகிழ்ச்சி..

34 அமைச்சர்கள் முழுமையாக இருந்தாலும்,
முழுநேரம் தொலைக்காட்சி வெளிச்சத்தில் அவர்கள்..

என்னற்ற வாக்குறுதி, எப்போது முடிப்பார்,
என்றென்றும் ஊர்மக்கள் ஒரு சேர பேச்சு,
நீட் என்ற வார்த்தைதனை நிரந்தரமாய் பேசி,
தமிழ்நாட்டை ஆண்டிட்டார் ஐந்தாண்டு காலம்.. !

என்னருமை தமிழ்மக்காள் என்று நீர் விழிப்பீர்.?
எப்போது ஒரு தமிழன் தமிழ்நாட்டை ஆள்வான்.?

இளைஞர்களே எப்போது நாடாள நீர் வருவீர்..?
இரவெல்லாம் திரைமுன்னே காலத்தைக் கழித்தால்..

பழமிருக்க காய்களை நீ தேடுவது ஏனோ..?
பாமரனா..? படித்தவனா..? பார்போற்றும் விஞ்ஞானி
பலருண்டு தமிழ்நாட்டில் அறிவாய் நீ தம்பி.. !

சொல்வதெல்லாம் சொல்லிவிட்டேன்
சோம்பலை நீ கலைத்திடுவாய்
சொல்வதற்கு ஏதுமில்லை – விழித்திடுவாய் தம்பி...!

(அழைக்கின்றார் அழைக்கின்றார் அழைக்கின்றார் வேந்தர்.)




# பார்க்கவகுல முன்னேற்ற சங்கம் மாநில செயற்குழுக் கூட்டம்

பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 31.10.2026 அன்று காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் டி.பி.கணேசன் மினி ஹாலில் நமது சங்கத்தின் நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் தலைமையிலும், சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு.கோவைத்தம்பி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாமுச பொதுச் செயலாளர் கதிர்.கணேசன் மூப்பனார் வரவேற்றார். தீர்மானங்களை இணைப் பொதுச் செயலாளர் பி.அன்புதுரை வாசித்தார். மாநிலப் பொருளாளர் எம்.செந்தில்குமார் இரங்கல் தீர்மானங்களை வாசித்தார். மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் செயற்குழு தலைமையுரை ரையாற்றினார். பாமுச தலைவர் திரு.கோவைத்தம்பி சிறப்புரை வழங்கினார். சங்கத்தின் ஆலோசகர் வழக்கறிஞர் டாக்டர் வி.வெங்கடேசன் கருத்துரை வழங்கினார்.






மேலும் இக்கூட்டத்தில் ஐஜேகே பொதுச் செயலாளர் முனைவர் க.சண்முகம், இளைஞரணி செயலாளர் கே.வி.ராம்குமார், மாநில துணைத் தலைவர்கள் அ.ஆ.இராமன், ஆர்.தங்கராஜ், வி.சுப்பிரமணியன்,

முதன்மை அமைப்புச் செயலாளர் முத்துக்குமார், அமைப்புச் செயலாளர்கள் விடியல் விஜயகுமார், கே.ஆர்.விஜயகுமார், பார்த்தசாரதி, வழக்கறிஞர்அணி செயலாளர் சத்தியமூர்த்தி, துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன், விவசாயஅணி செயலாளர் ராமசாமி, இளைஞரணி இணைச் செயலாளர் வெற்றிச்செல்வன், இளைஞரணி துணை செயலாளர்கள் தளபதிராஜ், கவியரசன், மாணவரணி துணை செயலாளர் யுவனேஷ், தெற்கு மண்டலத் தலைவர் கண்ணன், ஐஜேகே மாநில நிர்வாகிகளான ஐடிவிங் செயலாளர் முனைவர் ரமேஷ், துணை செயலாளர் நாராயணசாமி, மகளிரணி துணை செயலாளர் கலையரசி, இளைஞரணி துணை செயலாளர் பி.ஆர்.சுரேஷ், மற்றும்

பாமுச மாவட்டத் தலைவர்களான திருவள்ளூர் சண்முகம், செங்கல்பட்டு அசோக், தஞ்சாவூர் வடக்கு காந்தி, தெற்கு திருமாறன், புதுக்கோட்டை வடக்கு அய்யாதுரை, தெற்கு மாவட்ட செயலாளர் ராஜசேகர், திண்டுக்கல் செல்வராஜ், கடலூர் கொளஞ்சியப்பர், திருச்சி கிழக்கு ஜெயச்சந்திரன், மேற்கு



செந்தில்குமார், சேலம் கிழக்கு கண்ணன், திருவாரூர் ஏ.சி.தியாகராஜன், சிவகங்கை மாவட்ட செயலாளர் லெட்சுமணன், அரியலூர் யோகா.கலியமூர்த்தி, இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், விழுப்புரம் கார்த்திக், பெரம்பலூர் வடக்கு காமராஜ், தெற்கு கிருஷ்ணமூர்த்தி, கள்ளக்குறிச்சி கிழக்கு பொன்முடி, மேற்கு நாராயணன் மற்றும் இந்திய ஜனநாயகக் கட்சியின் நமது சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற தொகுதி மாவட்டத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பார்க்கவகுல முன்னேற்ற சங்கம் மாநில செயற்குழுக் கூட்டம்



நாள் : 31.01.2026

இடம் : SRM - பல்கலைக்கழக வளாகம், காட்டாங்குளத்தூர்

## தீர்மானங்கள்

### தீர்மானம் : 01

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் நமது சங்கத்தின் நிறுவனத் தலைவர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்பட்டு நமது சங்கம் செயல்படும் என இச்செயற்குழு தீர்மானிக்கிறது

### தீர்மானம் : 02

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் இந்திய ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றிபெற மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் ஐயா அவர்கள் யாரை தேர்தலில் போட்டியிட செய்தாலும் சங்கத்தின் சார்பில் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு தந்து அவர்களை வெற்றிபெறச் செய்வோம்.

### தீர்மானம் : 03

மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் தலைமையில் இந்திய ஜனநாயகக் கட்சியின் சார்பில் எதிர்வரும் பிப்ரவரி 8ஆம் தேதி கடலூர் மாவட்டம்,





## தீர்மானம் : 05

மாநில பொறுப்பாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வருடத்திற்கு இரண்டுமுறை அதாவது மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுடன் ஒருமுறையும், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஒருமுறையும் கண்டிப்பாக சென்று கலந்தாய்வு செய்ய வேண்டும் என இச்செயற்க்குழு அறிவுறுத்துகிறது.

## தீர்மானம் : 06

நமது சங்கத்தின் செய்திகளை மாதம் தோறும் கொண்டு சேர்க்கும் மாத இதழான பார்க்கவன்குரல் புத்தகம் மீண்டும் அச்சிடப்பட்டு சந்தாதார்களிடம் செல்வதற்கு காரணமாகத் திகழும் நமது சங்கத்தின் நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களுக்கு இச் செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

வேப்பூரில் நடைபெறும் மாநில மாநாட்டில் பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அனைத்து பார்க்கவர்களையும் ஓர் அணியில் திரட்டி மாநாட்டை தமிழகமே உற்று நோக்கும் வகையில் வெற்றிபெறச் செய்வோம் என இச்செயற்குழு அனைத்து பொறுப்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறது.

## தீர்மானம் : 04

சமுதாய சங்கத்தின் மிக முக்கிய கோட்பாட்டில் ஒன்றான அனைத்து சமுதாயத்தினரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு எதிர்மறையான கருத்துக்களை கூறாமல் பார்க்கவகுல முன் னேற்ற சங்கத்தின் வளர்ச்சிக்கும், இந்திய ஜனநாயகக் கட்சியின் வளர்ச்சிக்கும் எந்த விதத்திலும் பாதிப்படையாத வகையில் செயல்படவேண்டுமாய் இச்செயற்க்குழு அனைத்து பொறுப்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறது.

## தீர்மானம் : 07

பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் மாநில, மண்டல, மாவட்ட நிர்வாகிகள் பார்க்கவன் குரலுக்கு மாதத்திற்கு ஒருவிளம்பரம் கண்டிப்பாக பெற்றுத் தரவேண்டுமாய் இச்செயற்க்குழு கேட்டுக்கொள்கிறது. மேலும் மாவட்டம் தோறும் பார்க்கவன் குரல் ஆயுள்சந்தாவை அதிகரித்திட வேண்டுமாய் இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

## தீர்மானம் : 08

ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கிய நகரப்பகுதிகளில் வசிக்கும் நம் மக்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகாமல் இருக்கிறார்கள். அதனை நீக்கும் வகையில் நமது சொந்தங்கள் ஒன்றுகூடி எளிய முறையில் குடும்ப விழா நடத்தும்படி மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.







## தீர்மானம் : 09

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட பொறுப்பாளர்கள் கீழ்காணும் கோப்புகள் கண்டிப்பாக பராமரிக்கப்பட வேண்டும்

1. மாநில பொறுப்பாளர் பொறுப்பு
2. மாவட்ட பொறுப்பாளர் முழுவிபரம் புகைப்படத்துடன்
3. ஒன்றியங்களின் பொறுப்பாளர்கள் முழு விபரம் புகைப்படத்துடன்
4. பொதுக்குழு உறுப்பினர்கள் முழு விபரம் புகைப்படத்துடன்
5. பார்க்கவன் குரல் சந்தாதாரர்கள் பற்றிய முழு விபரம்
6. மாவட்டத் தலைவர்களின் செயல்பாட்டறிக்கை
7. கிளைகள் பற்றிய விபரம்
8. நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு புகைப்படத்துடன்
9. பொதுக்குழு, செயற்குழு தீர்மான (Minutes Note) புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும் என இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

## தீர்மானம் : 10

உலகெங்கிலும் வாழும் ஒட்டு மொத்த பார்க்கவர்களின் எண்ணிக்கையை அறிந்திடவும் அவர்களுக்கு நமது சங்கத்தின் உறுப்பினர் அட்டையை வழங்கிடவும் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் வழிகாட்டுதல் படி அனைத்து பொறுப்பாளர்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டுமாய் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.





# 125 நாள் ஊரக வேலைத் திட்டத்தை எதிர்க்கும் திமுக அரசைக் கண்டித்து அதிமுக கூட்டணிக் கட்சிகள் ஆர்ப்பாட்டம் இந்திய ஜனநாயகக் கட்சி பங்கேற்பு

கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பு 13.02.2026 அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் ஆலோசனைப்படியும் கட்சியின் தலைவர் இளையவேந்தர் டாக்டர் ரவிபச்சமுத்து அவர்கள் உத்தரவின்பேரிலும் கட்சியின் தமிழகம் முழுவதும் உள்ள சட்டமன்ற தொகுதித் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு திமுக அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினார்கள்.

100 நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரிபவர்கள் கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் ஆவார்கள். இந்த ஊதியத்தை நம்பியே கிராமப்புற ஏழை, எளிய மக்கள் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அதிமுக ஆட்சிக் காலத்தில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் முறையாக செயல்படுத்தப்பட்டதுடன், குறித்த நேரத்தில் பணியாளர்களுக்கு ஊதியமும் வழங்கப்பட்டது.

2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது 100 நாள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், 150 நாட்களாக உயர்த்தப்படும் என்றும்; பணியாளர்களின் சம்பளம் 300 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும்; 100 நாள் வேலைத் திட்டம் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த திமுகவின் ஸ்டாலின் மாடல் அரசு, இதுவரை இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக, கடந்த 57 மாத கால திமுக ஆட்சியில், ஆண்டுக்கு சராசரியாக 40 நாட்கள்கூட வேலை வழங்கப்படவில்லை என்றும்; பணியாளர்களுக்கு குறித்த நேரத்தில் ஊதியம் வழங்கப்படுவதில்லை என்றும், ஏழை, எளிய மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தத் திட்டத்தில் திமுகவினர் பல்வேறு முறைகேடுகளை செய்துள்ளதாகவும் புகார்கள் வந்துள்ளன.

இந்நிலையில், மத்திய அரசு 100 நாள் வேலைத் திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தியதுடன், பணியாளர்களுக்கு நன்மை வழங்கும் வகையில் பல மாறுதல்களை செய்துள்ளன. இந்தச் சட்டம் மாநில அரசிற்கு வெளிப்படையாகவே கீழ்க்கண்ட

அதிகாரத்தை வழங்குகிறது. அவற்றில், பணியாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒருசில முக்கியமான நன்மைகள்:



மாநில அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. வேலையின் தன்மை மற்றும் பணியாளர் திறனை, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் பணிகளை அடையாளம் கண்டு ஒப்புதல் வழங்கலாம். எந்தப் பணிகள் எடுக்கப்பட வேண்டும்; அவை எங்கு செயல்படுத்தப்பட வேண்டும்; எப்போது செயல்படுத்தப்பட வேண்டும். உச்ச வேளாண் பருவங்களில் இடை நிறுத்தங்களை அறிவிக்கலாம். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டத்தின் அடிப்படையிலேயே, மாவட்டம், வட்டாரம் மற்றும் பஞ்சாயத்து அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

15 நாட்களுக்குள் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும். இப்புதிய சட்டத்தினால், தமிழ் நாட்டின் உள்ளாட்சி அமைப்புகள் பலன் பெறுகின்றன; பலவீனப்படுவதில்லை. இந்தச் சட்டம் அடிப்படை ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் குளங்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் சந்தைகள் போன்றவை அப்பகுதி மக்களுக்காக உருவாக்கப்படுகிறது. இது மாநில அரசுக்குத்தான் சொந்தமே தவிர, மத்திய அரசுக்கு சொந்தமல்ல என்பதையும், முறையாக பணிகள் நடைபெறுவதற்கு, பல வரையறைகளையும் நிர்ணயித்து மத்திய அரசு சமீபத்தில் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவு திமுகவினரின் முறைகேடுகளுக்கு இடையூறாக இருக்கிறது என்று கருதி, கிராமப்புற மக்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தையே சீர்குலைக்கும் பணியில் திமுக அரசு, மத்திய அரசின் புதிய 125 நாட்கள் வேலை உறுதித் திட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறது.






# இந்திய ஜனநாயகக் கட்சியின்
## தகவல் தொழில்நுட்ப அணி 2.0 விழா

இந்திய ஜனநாயகக் கட்சியின் தகவல் தொழில்நுட்ப அணி 2.0 விழா, 03012026 அன்று எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் டி.பி.கணேசன் மினி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா, ஐஜேகே தொழில்நுட்ப அணி புதிய தொடக்கத்தையும், எதிர்கால முன்னேற்றப் பாதையையும் அறிவிக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்தது.

நிகழ்வின் தொடக்கமாக மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். தேசிய கீதமும் தமிழ்தாய் வாழ்த்தும் ஒலிக்க, நிகழ்வு மரியாதையுடனும் எழுச்சியுடனும் நடைபெற்றது.

இவ்விழாவில் ஐஜேகே தொழில்நுட்ப அணியின் மாநில செயலாளர் டாக்டர் ஏபிஜி ரமேஷ் அறிமுக உரையாற்றினார். அவர் தனது உரையில், தொழில்நுட்ப அணியின் பொறுப்பாளர்கள் அனைவரும் ஐஜேகே வின் தலைவர்கள் என்று வலியுறுத்தி, தகவல் தொழில்நுட்ப அணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.



இந்திய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் முனைவர் க.சண்முகம் தனது உரையில் ஐஜேகே தொழில்நுட்ப அணியின் பொறுப்பாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், இல்லம் தோறும் ஐஜேகே வின் கொள்கைகள் மற்றும் சாதனைகளை கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.






கடந்த மூன்று ஆண்டுகளாக தொழில்நுட்ப அணியில் சிறப்பாக பணியாற்றிய பொறுப்பாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் நினைவு பரிசுகளை மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் பொற்கரங்களால் பெற்றுக்கொண்டு அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இந்நிகழ்வில் இந்திய ஜனநாயகக் கட்சியின் கடந்த 3 ஆண்டுகளில் செய்த பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த காணொளி காட்சிகள் திரையில் வெளியிடப்பட்டன. அவை ஐஜேகே தொழில்நுட்ப அணியின் அர்ப்பணிப்பையும் வளர்ச்சிப் பயணத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டின.

ஐஜேகே தகவல் தொழில்நுட்ப அணியின் புதிய லோகோவை மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் அறிமுகப்படுத்தி வெளியிட்டார். இந்த லோகோ, ஐஜேகே தகவல் தொழில்நுட்ப அணியின் புதுமை, முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்ப வலிமையை பிரதிபலிக்கிறது.

மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் தலைமை உரையில் ஐஜேகே தகவல் தொழில்நுட்ப அணியின் பொறுப்பாளர்கள் மற்ற கட்சிகளின் தகவல் தொழில்நுட்ப அணியை விட சிறந்தவர்கள்



என்றும், அவர்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் ஆலோசனைகள் வழங்கினார். மேலும், ஐஜேகே தகவல் தொழில்நுட்ப அணியின் பொறுப்பாளர்கள் மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள் என்றும் மாநில செயலாளர் முனைவர் ரமேஷ், மாநில துணை செயலாளர்கள் டாக்டர் ராகுல், எம்.பி.நாராயணசாமி, நவின், சுரேஷ், வேள்பாரி அருள் ஆகியோருக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார். நிகழ்வில் பங்கேற்ற பொறுப்பாளர்கள் மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்களுடன் ஆர்வமாக புகைப்படம் எடுத்துக்கொண்டு தங்களின் அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தினர்.






# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**22.01.2025** அன்று பிறந்தநாள் கண்ட பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் மாநில வழக்கறிஞர் அணி செயலாளரும், நாமக்கல் மாவட்டத் தலைவருமான வழக்கறிஞர் திரு.**சி.சத்தியமூர்த்தி** அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்





**23.01.2025** அன்று பிறந்தநாள் கண்ட பார்க்கவகுல முன்னேற்ற சங்கத்தின் அரியலூர் மாவட்டத் தலைவர் திரு.**யோகா.கலியமூர்த்தி** அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

**05.02.2025** அன்று பிறந்தநாள் கண்ட இந்திய ஜனநாயகக் கட்சியின் புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் திரு.**கே.பி.என்.சீனிவாசன்** அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.



## மணமகன் தேவை

பெயர் : **B.சௌமியா @ ஜெயந்தி** **B.Com, MBA**



பிறந்த தேதி : 10-12-1997 (புதன் காலை11:09)

இனம் : இந்து நத்தம உடையார்

பிறந்த இடம் : பாண்டிச்சேரி

ராசி : மேஷம்

நட்சத்திரம் : அசுவினி 2ம் பாதம்

லக்னம் : கும்பம்

| | | | |
|---|---|---|---|
| சனி | சந் | | |
| 1-லக் கேது மாந் | இராசி | | |
| குரு சுக் செவ் | | | ராகு |
| | புத(வ) சூரி | | |

தொழில் : HR SENIOR EXECUTIVE in Colan Infotech

வருமானம் : 60,000/- (மாதம்)

தந்தை/தாயின் பெயர் : பூபாலன் (Business) / கலைவாணி

உடன் பிறந்தோர் : 1தம்பி,(திருமணமாகாதவர்)
B.ஹரிஹரன் B.com., Cs IT company TCS.

தொடர்பு முகவரி : எண்:10, காமராஜர் தெரு,
லாஸ்பேட்டை, புதுச்சேரி - 605008

தொடர்புக்கு : 9894851869.

| | | | |
|---|---|---|---|
| கேது | மாந் | சந் | |
| சுக் சூரி | நவாம்சம் | | |
| செவ் | | | குரு |
| | 1-லக் புத(வ) | சனி | ராகு |

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **பு.சிவகாமி, C.A (Chartered Accountant)** |
| பிறந்த தேதி | : | 16.07.1998 |
| வேலை | : | UPSTREAM SPECIALIST - SHELL INDIA MARKETS P LTD |
| சம்பளம் | : | 12 லட்சம் (வருடம்) |
| ராசி | : | மீனம் |
| நட்சத்திரம் | : | ரேவதி |
| லக்கினம் | : | கன்னி |
| குலதெய்வம் | : | மால்வாய் |
| சாதி | : | பார்க்கவகுலம் நத்தமன் |
| உயரம் / எடை | : | 166 செமீ / 55 கிலோ |
| தந்தை /தாய் பெயர் | : | பி.புகழேந்தி / பொற்கொடி |
| உடன் பிறந்தோர் | : | யோகேஸ்வரன் (திருமணம் ஆகாதவர்) |
| முகவரி | : | நெ.8088, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், அயப்பாக்கம், சென்னை - 600 077. 7299347472 / 9941413374 |







## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **R.மனோஜ்குமார், B.E., (CSE)** |
| பிறந்த தேதி, நேரம் | : | 18.01.1995 இரவு 10.42 |
| உயரம், நிறம் | : | 174செமீ.சிவப்பு |
| நட்சத்திரம் | : | ஆயில்யம் பாதம்-3 |
| லக்கினம் | : | கன்னி |
| ராசி | : | கடகம் |
| பார்க்கவன் உட்பிரிவு | : | மலையமான் |
| வேலை,சம்பளம் | : | Expeditors Interna onal India Pvt Ltd, Chennai |
| .ஆண்டுவருமானம் | : | 16லட்சம் |
| தந்தை / தாய் பெயர் | : | ரமேஷ்,கீதா |
| சகோதர சகோதரிகள் | : | சகோதரி1(திருமணமானவர்) |
| தொடர்பு முகவரி | : | கள்ளக்குறிச்சி |
| தொலைபேசி | : | 9962933823, 9942825276 |

ராகு கேது உள்ளது







## மணமகன் தேவை

பெயர் : **S. ரித்திகா B.Tech (Honors)**





பிறந்த தேதி : 03.11.2002

உயரம், நிறம் : 170 செமீ, மாநிறம்

நட்சத்திரம் : சித்திரை பாதம்-1

லக்கினம் : மீனம்

ராசி : கன்னி

பார்க்கவன் உட்பிரிவு : நத்தமான்

வேலை : Chennai Psiog Digital

சம்பளம் : 6 லட்சம் ஆண்டு வருமானம்

தந்தை /தாய் பெயர் : S.சசிக்குமார் / S.வேலுமணி

சகோதர சகோதரிகள் : சகோதரி - 1



தொடர்பு முகவரி : மேலத்தெரு நடுக்காவேரி திருவையாறு தஞ்சாவூர்

தொலைபேசி : 6383573743

எதிர்பார்ப்பு : B.Tech, BE படித்த மணமகன் தேவை

## மணமகன் தேவை

பெயர் : **S. சுருதி. Aeronautical Engineer**



பிறந்த தேதி : 12.07.2002 அதிகாலை - 2.35

உயரம், நிறம் : 162 செமீ, சிவப்பு



நட்சத்திரம் : ரோகிணி

லக்கினம் : ரிஷபம்

ராசி : ரிஷபம்

பார்க்கவன் உட்பிரிவு : மலையமான்

வேலை சம்பளம் : சொந்த தொழில் Actor / Model

சம்பளம் : 10 லட்சம் ஆண்டு வருமானம்

தந்தை/தாய் பெயர் : செல்வம் / ஹேமலதா



சகோதர சகோதரிகள் : இல்லை

தொடர்பு முகவரி : சென்னை

தொலைபேசி : 8511914415

## மணமகன் தேவை

பெயர் : **S. சிவரஞ்சனி** **C.A., (Chartered Accountant)**



பிறந்த தேதி, நேரம் : 26.11.1997 காலை.10.25

உயரம், நிறம் : 5 அடி, 5 அங்குலம்

நட்சத்திரம் : சித்திரை, பாதம்1




லக்கினம் : மகரம்

ராசி : கன்னி

பார்க்கவன் உட்பிரிவு : மலையமான்

வேலை,சம்பளம் : Audit Executive - Chennai

தந்தை / தாய் பெயர் : சினிவாசன் /அம்சவள்ளி



சகோதர சகோதரிகள் : இளைய சகோதரிகள் - 2

தொடர்பு முகவரி : சேப்பாக்கம் (Po), வேப்பூர் (TK), கடலூர் (DT)


தொலைபேசி : 8754725323, 6383767991

எதிர்பார்ப்பு : B.Tech, BE படித்த மணமகன் தேவை

## மணமகள் தேவை

பெயர் : **M.கோகுல்ராஜ்,** **M.A (Political Science)**

பிறந்த தேதி, நேரம் : 07.01.1996 மாலை.5.20





உயரம் : 5அடி, 6 அங்குலம்

நிறம் : மாநிறம்

நட்சத்திரம் : பூசம் பாதம்2

லக்கினம் : மிதுனம்

ராசி : கடகம்

பார்க்கவன் உட்பிரிவு : நத்தமன்


வேலை : அரசு வேலை (JA, LF. Audit)

சம்பளம் : மாதம் ரூ.40,000

தந்தை /தாய் பெயர் : P. மருதராஜன் / M.மல்லிகா

சகோதர சகோதரிகள் : மூத்தசகோதரிகள்-2 (திருமணமானவர்கள்)

தொடர்பு முகவரி : 5/54, மேற்கு காட்டுகோட்டை புதூர், தியாகனூர் தலைவாசல், சேலம் - 636101



தொலைபேசி : 9962096943, 9543036677

எதிர்பார்ப்பு : படித்த மணமகள் தேவை



## மஹாராஷ்டிரா மாநிலத்தின் முதலமைச்சர் மாண்புமிகு தேவேந்திர பட்னாவிஷ் அவர்களை மரியாதை நிமித்தமாக இந்திய ஜனநாயகக் கட்சியின் தலைவர் டாக்டர் ரவிபச்சமுத்து அவர்கள் சந்தித்தார்.

## ஆந்திராவில் மரடைப்பால் உயிரிழந்த தமிழக லாரி ஓட்டுனரின் உடல் சொந்த ஊர் கொண்டு வர உதவிய மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள்



தாராபுரம் பகுதியை சேர்ந்தவர் சுரேஷ் குமார் வயது 43 இவருக்கு மதன் குமார் என்ற மகனும், ஸ்ரீ நந்தினி என்ற மகளும் உள்ளனர். லாரி ஓட்டுநராக வேலை செய்து வரும் இவர் ஒரிசாவில் இருந்து வந்து கொண்டிருக்கும் போது ஆந்திர மாநிலம் ராஜ முந்திரி பகுதியில் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த இவரது மகன் மதன்குமார் உடனே இந்திய ஜனநாயகக் கட்சியின் திருப்பூர் மாவட்ட தலைவர் பாரி கணபதியிடம் தகவலை தெரிவித்தார். இந்த தகவலை உடனே கட்சியின் நிறுவனர் பாரி வேந்தரின் கவனத்திற்கு கொண்டு சென்றதும் உடனடியாக உயிரிழந்தவரின் குடும்பத்தினரை தொடர்பு கொண்டு அங்கிருந்து அவரது உடலை சொந்த ஊரான தாராபுரம் கவுண்டச்சி புதூர் கொண்டு வர ஆகும் முழு செலவையும் தான் ஏற்றுக்கொள்வதாக உறுதி அளித்தார். அதன் படி இன்று கட்சியின் திருப்பூர் மாவட்ட தலைமை அலுவலகத்தில் மாவட்ட துணை தலைவர் முருகன், மாநகர தலைவர் பாஸ்கர், மாநகர துணை தலைவர் நீலகண்டன் முன்னிலையில் வைத்து அதற்கான முழு தொகை 80,000/ ரூபாயை டாக்டர் பாரிவேந்தரின் சார்பில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டது. பெற்று கொண்ட குடும்பத்தினர் கண்ணீர் மல்க தங்களது நன்றிகளை தெரிவித்தனர்.

# இந்திய ஜனநாயக கட்சியின்
## 4வது மாநில மாநாட்டிற்காக
## மாண்பமை டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் எழுதிய மூன்றாம் பாடல்

**பல்லவி**

தமிழ்மண்ணே தமிழ்த்தாயே மன்னிப்பாயா
தமிழ்நாட்டை ஆள்வதற்கோர் தமிழன் இல்லை
என்று நீ புலம்புவதோ கேட்குதம்மா
எதிர்காலம் உனதாகும் நம்பு தாயே.. !

மாடுகட்டி போரடித்து மாளாது என்று
ஆனைகட்டி போரடித்த உந்தன் பிள்ளை
இலவசத்துக்கு கையேந்தி நிற்குதம்மா..

எண்கோடி பிள்ளைகளை பெற்றாய் நீயே
எவருமே ஒற்றுமையாய் இல்லை தாயே
இருந்திருந்தால் என் நாட்டில்
மாற்றான் இங்கே ஆள்வதற்கு வாய்ப்பில்லை
அறிவாய் நீயே..



**சரணம் - 1**

தான்பெற்ற பிள்ளைக்கு உணவுதந்து
தானே வளர்த்தது போல் பேசுகின்றான்
யார் கொடுத்த அந்தப்பணம் சிந்திப்பாயா..?

இலவசங்கள் வந்ததனால் இளைஞர் இங்கே
சோம்பேறி ஆகிவிட்டார் அறிவாய் தாயே..

செய்கின்ற தவறெல்லாம் மறைப்பதற்கு
செயலிழந்து போவதற்கு மதுவைத் தந்தார்

உன்பிள்ளை தமிழ்நாட்டை ஆள்வதற்கு
உழைத்திட வேண்டுமம்மா சோம்பல் இன்றி

இதையெல்லாம் செய்துவிட்டால் உனதுநாட்டில்
இனிமேலும் உனக்கிங்கு புலம்பல் இல்லை.. !

இருண்ட நம் தமிழ்நாட்டை எழுப்பிடவே
இளைஞனே நீ இன்று எழுந்திடுவாய்,
பிழைப்பாயே இப்பெரும் திருநாட்டில்...

மாநிலங்கள் எங்கேனும்
மாற்று மொழிக்காரன் ஆண்டதுண்டா?
இதை அறிந்து முழித்து விடு..

இப்பெரும் நம் தாய்க்கே
இனிமேலும் மகிழ்ச்சி கொள்வாய்..

தமிழ்மண்ணே தமிழ்த்தாயே முடிவெடுப்போம்
தமிழ்நாட்டை தமிழனே ஆளவைப்போம்.. !



PARKAVAN KURAL Tamil Monthly R.DIS No. 243/11. RNI No: TNTAM/2011/40101, Registered No. TN/CC(S) DN/447/24-26. Licenced to Post WPP No. TN/PMG(CCR)/WPP/326/2024-26, Publised On Every Month 3rd Week Posted act. Patrika Chennal. Egmore between - 26-31 of February 2026



அண்மையில் சீஷெல்ஸ் நாட்டின் அதிபர் 5 நாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்திருந்த நிலையில், சென்னை வடபழனியில் அமைந்துள்ள SIMS மருத்துவமனைக்கும் வந்திருந்து மருத்துவமனையின் கட்டமைப்பு மற்றும் உயர்தர சிகிச்சை வசதிகளை கண்டு பாராட்டினார். அதனைத் தொடர்ந்து சீஷெல்ஸ் நாட்டின் அதிபருக்கு டெல்லியில் நமது பாரத பிரதமர் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள் விருந்தளித்தார். அந்த விருந்தில் மாண்புமிகு பாரத பிரதமர் அழைப்பின் பேரில் நமது இந்திய ஜனநாயகக் கட்சியின் தலைவரும், SIMS மருத்துவமனையின் தலைவருமான **இளையவேந்தர் டாக்டர் ரவிபச்சமுத்து** அவர்கள் கலந்து கொண்டார்.

Edited, Printed and Published by S.JAYARAMAN on behalf of Parkavakula Munnetra Sangam, No: 9, 3rd Avenue, 34th Street, Ashok Nagar, Chennai - 83. Printed at Chennai Offset Printers. No:19/1, & 21/2, Kitabath Khan, Bhadur Street. Elliess Road, Chennai - 600002